# சிலிண்டர் தட்டுப்பாடு : ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!

## கழகக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் – அமைச்சர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் பங்கேற்பு!



தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு துணை போகும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து தஞ்சாவூர் மத்திய மாவட்ட கூட்டணி கட்சிகள் சார்பில் நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் கண்டன உரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மருத்துவர் அணி துணை செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி, உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் என்டிஏ அரசையும் அதன் கூட்டணி கட்சிகளையும் கண்டித்து மதுரை முனிச்சாலையில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ தலைமையில், கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மாநில தீர்மானக் குழுச் செயலாளர் அக்ரி கணேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம் உள்ளிட்டோர் முன்னிலையில் சிறப்புரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒச்சுபாலு, மூவேந்திரன், ராகவன், முருகவேல், மாவட்ட அணி அமைப்பாளர்கள் துரைகோபால்சாமி என்கிற அன்பு, சவுந்தர்ராஜன், பாலகிருஷ்ணன், சுப்பிரமணி, காவேரி சொக்கலிங்கம், பகுதிச் செயலாளர்கள் முகேஷ் சர்மா, சரவணன் அம்பலம், ஜீவன் ரமேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.ஆறுமுகம், வைகை பரமன், மணிமாறன், முத்து கணேசன், தொமுச அல்போன்ஸ், கருணாநிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகே விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், எம்.எஸ்.ஹரிபாபு,சைதை சாதிக், மணிகண்டன் நாடிமுத்து, தி.மு.க தலைமையிலானக் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த காங்கிரஸ் சி.கே.பெருமாள், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த இரா.வில்வநாதன், செ.ரா.பார்த்தசாரதி, ம.தி.மு.க. மு.செந்திலதிபன், ப.சுப்பிரமணி, வி.சி.க வன்னியரசு, ஜேக்கப், தெ.பாண்டுரங்கன், சி.பி.எம். சா.லெனின், சி.பி.ஐ. மணிகண்டன், த.மு.மு.க. ஷாகுல்அமீது, எஸ்.டி.பி.ஐ. – முகம்மது பிலால், தே.மு.க. – குமார், சுரேஷ், முருகன், இ.யூ.மு.லீக் – முஸ்தபா உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்துகொண்டனர்.



சமையல் எரிவாயு LPG தட்டுப்பாட்டைக் கண்டித்தும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து குன்றத்தூர் தெற்கு – மத்திய ஒன்றிய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நந்தம்பாக்கத்தில் நடைபெற்றது. குன்றத்தூர் (தெ) ஒன்றிய கழகச் செயலாளர் / காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி வரவேற்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் / திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை கண்டன உரையாற்றினார். இதில் கழகத்தினர், தோழமைக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



காஞ்சிபுரத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் தமிழ் நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கேஸ். இல்லை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசு துணை போகும் அடிமை கூட்டணியை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பெ.சண்முகம் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் தெற்கு பகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் நாடாளுமன்றக் கழக குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி., சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு,தேமுதிக பொருளாளர் எல்.கே. சுதீஷ் ஆகியார் கலந்துகொண்டனர். உடன் கழக மாணவரணிச் செயலாளர் திருமதி.ஜெ.வீரமணி, பகுதிக் கழகச் செயலாள ந. இராமலிங்கம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணை செயலாளரும் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளருமான வே.கௌதமன், கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருப்பூர் இரயில் நிலையம் அருகில் திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை நிறுவன தலைவர் உ.தனியரசு ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே. டி.மு.நாகராசன் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.